News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a newspaper at the General Post Office, Sri Lanka
Under No Q/J/...
Established 1841 : A Christian Weekly : Published Every Friday
Vol:- 155 Jaffna, Friday 13, May 1994 No: 14
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs. 100/-
For Advertisements
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai

# A Message from the President of the World Council of Churches

Dear Sisters and Brothers in Christ,

"Grace to you and peace from God our Father and the Lord Jesus Christ"

In the afterglow of Easter we are renewed in our confidence in the eternal love of God through the death and resurrection of our Saviour Jesus Christ. With St. Paul we too have longed to know the "Fellowship of his sufferings" so that we may share in "the power of his resurrection" (Phil. 3.10). Galvanized by the miracle of the resurrection. we are born anew in our faith and go forward to live with undaunted hope We are now called to proclaim the Good News and to "spread the honours of Jesus' name"

At Christmas we celebrated the coming of our Sovereign God to be with us; at Easter we rejoiced in the hope of glory promised in the resurrection of our Lord Jesus Christ; now at Pentecost we celebrate the coming of God the Holy Spirit to abide in us.

It is significant that the descent of the Spirit at the first Pentecost happened when "they were all ot one accord in one place" (Acts 2 . 1). Even today, in order to be open to the life-giving descent of the Spirit, we need to be in prayer with one accord for the healing of our tormented world. offering to it a visible sign as Christians of the unity that God intends for all

Our world has become a vastly different place since we sent our last Pentecost message to you. There have been changes of far-reaching implications. The Church is obligated by its very calling to provide the spiritual resources and models of excellence for human conduct in a world so intensely in search of life affirming values. Our source of power to do this lies in the Pentecost experience. "When the Spirit comes" Jesus promised. "He will lead you into all truth" (John 16.13,)

This year has been designated as the Year of the family. It is good to reflect on the family during the seasons of Pentecost, for family has to do with relationships The Spirit the scripture says, is the One who binds us into a relationship of love with God and one another. Can it be, we ask ourselves at this Pentecost, that we have failed to witness to God's intention that we live in concord with one another, weave patterns of caring love and propagate values that nurture the family in the midst of society? Over the past thirty years there has been a clarion call to "save the family." The two World Wars and the resultant industrial developments have so impacted our traditional roles in so many of our societies that family, as we have known it, has become a threatened entirty. Now, in 1994, the family is still threatened by changing values, economic pressures and undefined life styles.

The concept of the family today is changing, but it remains necessary because human beings are not made to be alone. It is important, then, that churches also focus on the family in this International Year of the Family

We must not miss the opportunity to make our contribution to the search for the model and meaning of the family in our times. We are called not only to stress the significance of the family as that which sustains, nurtures and supports units in society, but we also need to discover and hold up its biblical foundation and the role and meaning it has for our time.

(Continued to page 4)

## THE LONGEST UNDERSEA RAILWAY TUNNEL

The queen declared open the railway tunnel under the English channel linking England with France on 6th of this month. the work has been going on for several years costing 20 billion Pounds. The tunnel is 50 Km and the train about a quarter mile long and the crossing takes about 35 — 40 minutes. Travellers can take their cars across on the train ( drive in ),

## C. C. F. C. FIELD DIRECTOR VISITS JAFFNA

Ms Leslie Collins Field Director of Christian Children's Fund of Canada arrived in Jaffna on 3rd May1994 and visited some of the Projects supported by the above organization.

She conducted a workshop for J. D. C. S. I -C.C. F.C.officers on 6th May 1994 and for anglican Church officers on 7th May 1994

She stayed at Vaddukoddai, Uduvil and Jaffna town and left on 9th May 1994

## FIRST CONFIRMATION AT THOLPURAM

Tholpuram Parish in the Vaddukoddai circuit is a recently formed congregation which is growing fast. The first confirmation service was held here on 1st May 1994 when 18 people were confirmed by the Bishop of the J. D. C. S. I., the Rt. Rev Dr. S. Jebanesan.

The candidates were presented by the Rev A. A. Paul, Circuit Pastor. Mr. D. S. Mathiaparanam, worker - in - charge of the church read the scripture lession.

The Holy Eucharist was celebrated by the Bishop, assisted by Revds. P. R. Navendranugoolan of Kilinochchi Church and A. A. Paul.

After the service a public meeting was held to welcome the Bishop. The following spoke,

1 ) Mr. M. Paramalingam, Treasurer of the Church
2 ) Mrs. Naguleswary on behalf of those confirmed.
3 ) Mr. D.S. Mathiaparanam Worker
4 ) Mr. K. Ranjan on behalf of the youth

The meeting came to an end with benedcition pronounced by the Bishop.

# BOOK RELEASE

Two books were released by the Jaffna Diocese of the Church of South India in the Bishop Kulandran Memorial Hall. Jaffna college, Jaffna on 5th May 1994 at 3 30 p. m.

The first copy of the book ,,Yarlpanathu Christhava Kavingharkalum Keerthanaikalum" written by the Rt. Rev. Dr. S. Jebanesan was handed over to The Rt. Rev. D. J. Ambalavanar' former Bishop. This deals with a few Jaffna Tamil Poets. who composed Christian lyrics.

Other book to be released was "Mary Magdalene" written by Naventhan". The copy was given to Mr. G. Rajanayagam' Principal Jaffna College.

The Rev. D. R. Ambalavanar chaired the function

The following spoke at the function.

1 ) The Rev J. Jebamohan
2 ) Prof. S. Chanmugathas
3 ) Dr. S. Sivalingarajah University of Jaffna & Evelyn Ratnam Institute 19th and 20th centuries.
4 ) Dr. Subramaniya Iyar, University of Jaffna
5 ) Poet Dominic Jeeva

The Rev. A. Jeyakumaran, Secretary, J.D.' C. S. I, proposed the vote of thanks.

## SPECIAL COUNCIL OF J D C S I

A Special Sessions of The Jaffna Diocesan Council of the Church of South India was held on 7th May 1994 to confirm the Consitutional Amendments since 1974.

The Council meeting was presided by the Bishop of the Diocese The Rt Rev. Dr. S. Jebanesan. The sessions started with devotions led by the Bishop. The Constitutinal amendments were presented by the former Bishop the Rt. Rev D. J. Ambalavanar after the roll was called by the Secretary The Rev A. Jeyakumaran. The amendments were accepted unanimously.

அத்தியட்சர் எழுதும்:

## அவுஸ்திரேலிய நினைவுகள்

திரு. ஜோன் சுகுணானந்தன் என்னால் அடையாளம் காணவே முடியவில்லை. அவர் என்னைத் தமது காரில் கன்பெராவுக்கு அழைத்துச்சென்றார். கன்பெராவில் நான் திரு. சுகுமார் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு. ஆனால் திரு. சுகுமாருக்கு அன்று சிட்டியில் முக்கியமான கூட்டம் இருந்தமையால் அவருடைய வீட்டாரே என்னை வரவேற்றனர். திருமதி அமலா சுகுமார் உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி. எனவே அவருக்கு உடுவில் மகளிர் கல்லூரியைப் பற்றியும், சாவகச்சேரித் திருச்சபையைப் பற்றியும் அதிக நேரம் கூறவேண்டியிருந்தது. இவர்களுடைய பிள்ளைகளை நான் முன்னர் பார்த்ததில்லை. அவர்களது கடிதங்களை வாசித்திருக்கிறேன். படங்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை. ஆனால் என்னைப் பற்றி அதிகம் படித்து வைத்திருந்தனர். அவர்களுடைய பேர்த்தியார் திருமதி சத்தியவதி எமர்ஸன் அவர்களும் ஆங்கு நின்று என்னை வரவேற்றார். கன்பெரா அவுஸ்திரேலியாவின் தலைநகர். இந்நகரத்தை ஒரு தனி மாநிலமாகப் பிரகடனஞ் செய்துள்ளனர். இம்மாநிலத்திற்கு அவுஸ்திரேலியா தலைநகர்ப் பிரதேசம் என்று பெயர். (A. C. T.) இம்மாநகரத்திலே எனக்குப் பல வேலைகள் காத்திருந்தன. இலங்கைத் தமிழர் பலர் அவுஸ்திரேலியாவின் தலைநகரில் அரசாங்க உத்தியோகம் வகிக்கின்றனர். முக்கியமான பத்திரிகைகள் இப்பட்டினத்திலிருந்துதான் வெளிவருகின்றன. இங்கு திருச்சபைத் தலைவர்களும், அவர்களது காரியாலயங்களும் உள்ளன. நான் அங்கு ஆற்ற வேண்டிய உரைகள் பற்றி எனக்குத் தெரிவித்தனர். திரு. மா. செல்வகுலேந்திரன் பாராளுமன்ற நூலகத்தில் பணியாற்றுகின்றார். இரவு ஒன்பது மணியாகியும் சூரிய அஸ்தமனம் நடைபெறவில்லை. எனவே கன்பெராவைச் சுற்றிப்பார்ப்பதில் சிறிது நேரத்தைச் செலவிட்டேன். இது தலைநகராக இருந்தபோதும் சனத்தொகை மிகக்குறைவாகவே இருந்தது. பல மைல்களுக்குப் பிரயாணம் செய்தாலும் வீதியில் எவரையுமே காணமுடியாது. ஆனால் காவல்துறையினர் மறைந்திருந்து வாகன ஓட்டிகள் பிரமாணங்களை மீறி வாகனங்களைச் செலுத்துகிறார்களா என்று பார்த்துக் கொள்வர். வீதியில் எவருமில்லையே என்று நினைத்து ஒருவர் தடைசெய்யப்பட்ட பாதையிற் சென்றால் அவர் சில டாலர்களை தண்டமாகச் செலுத்த நேரிடும். பெரிய தவறாக இருப்பின் ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தில் புள்ளி இடுவர். இவ்வாறு புள்ளிகள் குறைக்கப்பட்டு, வாகனஞ்செலுத்தும் அனுமதியை இழந்தவர்கள் பலருளர். சிவப்பு விளக்கை அலட்சியம் செய்பவர்களுக்கே அதிக புள்ளிகளைக் குறைக்கின்றனர் எனக் கூறப்பட்டது.

டிசம்பர் 9-ம் தேதி சில முக்கியமான சந்திப்புக்கள் ஏற்பட்டன. கன்பெராவின் பேராயர் அதிவண ஜோர்ஜ் பிறவுனிங் அவர்களைச் சந்தித்தேன். இவர் இளமைத் தோற்றமுடையவர். இலங்கைப் பிரச்சனைகளைப்பற்றி என்னிடம் கேட்டறிந்தார். பக்திபூர்வமாக என்னுடன் ஜெபஞ்செய்தார். அன்று வேறு அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் என்னைப் பேசும்படி அழைத்தனர். கன்பெராவில் உள்ள பாராளுமன்றத்திற்கும் என்னை அழைத்துச்சென்றனர். அங்கு இலங்கைப் பிரச்சனையில் ஆர்வம்கொண்ட சில முக்கிய செனட்டர்மார் என்னுடன் உரையாடினர். இவர்களது அன்பும், பரிவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. செனட்டர் ஹில், செனட்டர் மிக்கி போன்ஸ் ஆகியோர் தமிழர்களுடைய அவலங்கள் குறித்தும் மிகவும் அக்கறை காட்டினர். அவர்களது சிறந்த பணிக்காக நாம் கடவுளைத் துதித்தல் வேண்டும்.

நல்லவர்கள் உலகின் பல பாகங்களிலுமுள்ளனர். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் வாசகங்கள் என் மனதில் வந்தன. அன்று மதியம் "கன்பெராரைம்ஸ்" என்ற பத்திரிகை அலுவலகத்துக்கு என்னை அழைத்துச் சென்றனர். இலங்கைப் பிரச்சனை குறித்து என்னைப் பேட்டி கண்டனர். நான் ஒரு மதகுருவாக இருந்தமையால் இப்பத்திரிகையின் சமயத்துறையே என்னைப் பேட்டிகண்டது. இப்பத்திரிகையின் சமயத்துறைக்கு கண் தெரியாதவர் (கட்புலன் இழந்தவர்) பொறுப்பாக இருக்கிறார். ஆனால் அவரது கட்டளைக்கு அனைவரும் கீழ்ப்படிகின்றனர். நான் அங்கு சென்றவுடன் புகைப்படம் பிடிப்பவரைக் கூப்பிட்டு என்னைப் படம் பிடிக்குமாறு கூறினர். பின்னர் என்னைப் பேட்டி கண்டனர். எழுதிய செய்திக் குறிப்பை எனக்கு வாசித்துக் காட்டினர். இதனை பிரசுரிப்பதில் உங்களுக்கு ஆட்சேபனையில்லையா என்று கேட்டு எனது ஒப்புதலைப் பெற்றுக்கொண்டனர். நான் அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்படு முன்னர் இச்செய்திக்குறிப்பு பிரசுரமாகியது.

"இலங்கை அத்தியட்சர் அவுஸ்திரேலியாவின் தலையீட்டைக் கோருகின்றார்" என்ற தலைப்புடன் எனது செவ்வியைப் பிரசுரித்தனர். அன்றிரவு திரு. பாட்லெட் இராஜசிங்கம் அவர்களது வீட்டிலே எனக்கு இராப்போசன விருந்து நடைபெற்றது. இவரது மனைவியின் பெயர் மாலதி. அன்று கன்பெராவில் உள்ள முக்கியமான சில தமிழ் பிரமுகர்கள் விருந்துக்கு வந்திருந்தனர். பாராளுமன்றத்திலே நிழல் பிரதமராக இருந்தவரும், வேறு சில செனட்டர்மாரும் வந்திருந்தனர்" எல்லோரும் இலங்கையைப் பற்றிக் கூறுங்கள். யாழ்ப்பாணத்தைப் பற்றிக் கூறுங்கள், சமாதான முயற்சி பற்றிக் கூறுங்கள் என்று கேட்டவண்ணமிருந்தனர்

அடுத்த நாள் திரு சுகுமார் சிட்னியிலிருந்து கன்பெராவுக்கு வந்துசேர்ந்தார். கன்பெராவின் முக்கிமான இடங்களைச் சுற்றிப் பார்க்கவும், புகைப்படங்களை எடுத்துக்கொள்ளவும் வியப்பு ஏற்பட்டது. பல இடங்களிலே நண்பர்கள் சந்திக்க வந்தனர். அன்றிரவு வண. டி. எஸ். தியாகராசாவின் சகோதரி வீட்டில் விருந்துபசாரம் நடைபெற்றது. திருமதி மகிழ்ராசா என்னைச் சந்திப்பதற்காகப் பல வேலைகளையும் ஒதுக்கிவிட்டுக் காத்திருந்தனர். வண. டி. எஸ். தியாகராசாவினுடைய தாயார், திருமதி செ. தியாகராசா அவர்களும் நோய்வாய்ப்பட்ட நிலையிலும், தமது மருத்துவமனையிலிருந்து வந்து அங்கு என்னை எதிர்பார்த்திருந்தார். நீண்டநேரமாக யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தைப்பற்றியும், அவர்களது உறவினர்களைப் பற்றியும்பேசிக்கொண்டிருந்தோம். திரு. சுகுமாரும், திரு. மகிழ்ராசாவும் நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். திரு. மகிழ்ராசா யாழ். புனித யோவான் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ஏ. டபிள்யூ. இராசசேகரம் அவர்களின் புதல்வராவார்.

அடுத்த நாள் கன்பெரா வாழ் தமிழ் மக்களுடைய கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நான் தமிழிலேயே பேசினேன். சிங்களவரோ, வெள்ளைக்காரரோ இக்கூட்டத்திற்கு வரவில்லை. கன்பெராவில் வாழும் இலங்கையில் மிகப் பெரும்பான்மையினர் தமிழர்களே எனக் கூறக்கேட்டேன். ஆனால் பிரிஸ்பேனில் ஏற்பட்ட சுகப்பான அனுபவங்கள் எனக்குக் கன்பெராவில் ஏற்படவில்லை.



அன்று மாலை ஐக்கியப்படும் திருச்சபையின் தலைவர் இல்லத்திலேயே விருந்துபசாரம் நடைபெற்றது. இத்திருச்சபையின் தலைவராகிய திரு. டார்வி வூட் அவர்களும், அவரது துணைவியார் ஜெனட் வூட் அவர்களும் இலங்கைப் பிரச்சனையில் மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். ஆங்கிருந்த ஐக்கியப்படும் திருச்சபைகளின் தலைவர்கள் இலங்கைப்பிரச்சனையைத் தீர்க்கத் தாம் ஒரு குழுவை அனுப்பினால் எப்படியிருக்கும்? என்று கேட்டனர். நான் "வேறு பலரும் இவ்வாறு தூதுக்குழுக்களை அனுப்ப விரும்புகிறார்கள். அவர்களோடு இணைந்து வந்தால் செலவு குறைவாக இருக்கும். பயனும் அதிகமாய் இருக்கும்" என்று கூறினேன்.

அடுத்த நாள் ஞாயிறுதினம் கன்பெராவில் உள்ள ஐக்கியப்படும் திருச்சபையின் தேவாலயத்திற்கு வழிபாடு செய்யச்சென்றேன். அதே தேவாலயத்திலும் என்னை வாழ்த்துரை கூறும்படி கேட்டுக் கொண்டனர். இத்தேவாலயம் தலைநகரில் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளமையால், பல்வேறு சாதியினரும் இங்கு வழிபட வருகின்றனர். சிறிது காலம் உடுவிலில் வாழ்ந்து இப்பொழுது அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்துள்ள கிருபைத்திலகன் குடும்பத்தினரும் இங்கேயே வழிபாட்டுக்கு வருகின்றனர். திருமதி மு. கிருபைத்திலகன் வழிபாட்டுக்கு வந்திருந்தார். திரு. கிருபைத்திலகனுக்கு இந்தியாவின் தலைநகராகிய புதுடில்லியில் வேலை என்று கூறினார். தேவாலய வழிபாடு முடிந்த பின்னர் மோட்டார் வாகனத்தில் திரு. சுகுமாருடன் சிட்னி புறப்பட்டேன்.

## பிரிவுபசாரம்: மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு

கடந்த ஐந்து வருடங்களாக வடமராட்சிப் பகுதி மெதடிஸ்த திருச்சபையின் சேகர முகாமைக் குருவாக பணிபுரிந்து தற்பொழுது கொழும்புக்கு மாற்றலாகிச் செல்லவிருக்கும் அருள்திரு எஸ். எஸ். ஞானராஜா அவர்களுக்கு சேகரத்திலுள்ள ஐந்து சபைகளும் தனித்தனியே தேவனுக்கு நன்றி கூறும் ஆராதனைகள் சில வாரங்களாக நடாத்தினார்கள். இவற்றின் மகுடமாக கடந்த புதன் கிழமை (4 - 5 - 94) மாலை 4 மணிக்கு கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையில் நன்றி செலுத்தும் ஆராதனையும் பிரிவுபசார கூட்டமும் சேகர மட்டத்தில் நடைபெற்றது. அந்நாளின் ஆராதனையை பருத்தித்துறை அல்வாய் ஆலயத்தின் குருவான அருள்திரு. ஆர். தயாநிதி அவர்கள் நடத்தினார்கள். இறைசெய்தியை உடுப்பிட்டி தென் இந்தியத்திருச்சபை ஊழியரான திரு. ரி. இ. அசோக்குமார் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற பிரிவுபசார கூட்டத்தை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் திரு சி தேவராஜா அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்கள். இக்கூட்டத்தில் மெதடிஸ்த சபையினரோடு ஏராளமான பொது மக்களும் குறிப்பாக இடம்பெயர்ந்து வந்த மக்களும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் யாழ்மாவட்ட சாயீபாபா சங்கங்களின் பொதுச்செயளாளர் திரு. வே. சேனாதிராஜா மாவட்ட செயளாளர் திரு. சிறிநிவாசன் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி திரு. ஜீ.ஜே இராஜேந்திரன், கரவெட்டி கத்தோலிக்க திருச்சபையின் பங்குத்தந்தை அரசசார்பற்றநிறுவனங்களின் பிரதிநிதிகள். மற்றும் பல பிரமுகர்கள் சமூகமளித்து சிறப்புரையாற்றினார்கள்' அவர்கள் குறிப்பிடும் பொழுது போதகர் அவர்களின் ஆடம்பரமற்ற வாழ்க்கைபற்றியும்' இறைப்பணிபற்றியும், இன,மத பேதமற்ற ஊழியத்தையும், எல்லாவற்றிற்கும் மேலாக துயர் துடைக்கும் பணியில் அவருக்கு இருந்த ஆழமான ஈடுபாடுபற்றியும் சிறப்பாக பாராட்டிப் பேசினார்கள்.

இறுதியில் இறை ஆசியுடனும்' ஐக்கிய தேனீர் விருந்துடனும் இப்பொதுக்கூட்டம் இனிதே நிறைவேறியது.

தாரகை ஒளி

"முடியத்தக்க வழியில் முயலாத முயற்சி பலர்
கூடிப்பாதுகாத்தாலும் தவறுபடும்,,


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், Estd. 1841 வட்டுக்கோட்டை

மலர்: 155 13- 05 - 1994 இதழ்: 10


## தூய ஆவியரின் ஒருமைப்பாடு

இன்று நமது தமிழ்ச் சமுதாயம் சமுதாய நீதியையும் சமாதானத்தையும் நோக்கித் தவித்துக் கொண்டிருக்கிறதை நாம் அறிவோம். இனக் கலவரங்களினாலும், அதன் விளைவுகளினாலும், நம் மக்களின் மனம் பாதிக்கப்பட்டு பேதலித்திருக்கின்றது. இன்றைய இக்கட்டான நிலையில் - ஒருவரிலொருவர் அன்பு செலுத்தி, ஒருவரோடொருவர் இணைந்து ஒன்றாக வாழவேண்டுமென நினைத்தாலும், தம் விருப்பத்தின்படி ஒன்றுபட்டு வாழ முடியாதிருக்கின்றனர். இதற்குரிய காரணங்கள் பல!

'ஒன்றுபட்டால் நமக்குண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு.'' இந்த முதுமொழியை நாம் நன்கு அறிந்தும் - நாம் ஒன்றுபடாமலிருப்பதற்கு இடறாய் இருப்பதென்ன? இருக்கும் தடைக் கற்கள் யாவை? இவற்றை நாம் இனங்காண முடியுமா? இவற்றை அகற்றுவதெப்படி? இதைப்பற்றி, நாமொவ்வொருவரும் இறைவனின் திருமுன்னிலையிலிருந்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும், அப்பொழுது, தூய ஆவியானவர் சகலத்தையும் நமக்குத் தெளிவாக விளக்குவார்.

'உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி' என்றார்: இயேசு பெருமான். கடவுளின் ஆவி - இயேசுவின் ஆவியாகிய தூய ஆவியானவரை நாம் பெற வேண்டும். அவர் நம்மை ஆட்கொண்டால், நம்வழியாக அவர் சமுதாயத்தில் வேண்டிய ஒருமைப்பாட்டை நிறுவுவார். 'கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை' - நாம் ஒருவரில் ஒருவர் அன்பு செய்தால், - தூயஆவியரின் ஐக்கியத்தை நாம் இன்பமாய் அனுபவிப்போம்.

பெந்தேகொஸ்தே நாளின் பின் திருச்சபை பெற்ற முக்கியமான 'கனி' - அன்பு என்பதே - திருச்சபைப் பிதா - ஒரிகென் (கி. பி. 254), முதன் முதலாகத் தூயஆவியரைப் பற்றிக் குறிப்பிடும்போது - அவர் அன்பின் ஆவியெனத் தெளிவாகக் கூறியுள்ளார். புனித அகுஸ்தீன் அடிகளார் (கி. பி. 430), தூய ஆவியர், 'பிதாவையும் குமாரனையும் ஒன்றாக இணைக்கும் அன்பின் பந்தல்' எனக் கூறுகிறார். இந்த அன்பு தூய ஆவியரின் வழியாக திருச்சபை ஐக்கியத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.

நமது சமுதாயத்தில் ஒருமைப்பாடு உருவாக்கப்பட வேண்டுமானால் - நமது திருச்சபை மூலமே இது நடைபெற வேண்டும். தூயஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் சுயநலமற்ற - பிறர்நலங்கருதும் பெரும் மனப்பான்மையுடன் பணியாற்றுவர். பெரும்பாலும், நாம் அயலாரின் வெளிப்படையான குறைகளையே காண விழைகின்றோம் அவர்களின் 'மறைவான நிறைவுகளை'க் காண விழைவதில்லை, இதனால், நமக்குள் ஒற்றுமையில்லை - நமது குடும்பத்தில், சமூகத்தில் பல பிளவுகள் ஏற்பட்டு வருகின்றன.

தூய ஆவியரில் ஒன்றுபட்டு ஐக்கியமாக வாழ்பவர்கள் - தம் அயலார்பால் - புதிய மனோ நிலையும், புதிய அணுகு முறையையும் கொள்வார்கள். சாதி, சமய வேறுபாடின்றி நாம் ஒன்றுபட்டு, இறைவனின் திருச்சித்தப்படி, எவ்வித மனவேறுபாடுமின்றி வாழ்தல் வேண்டும் நமது சமுதாயத்தை இன்றைய காலக் கட்டத்தில் சோர்ந்து, தளர்ந்து போக விடாது - இறையன்பினால் அவர்களுக்கு உயிர்பளித்து - கஷ்டங்கள், துயரங்கள் நடுவிலும் உறுதியான மனத்துடன் இறைவனில் பூரண நம்பிக்கை கொண்டு உயிர்ப்புடன் ஒருவருக்கொருவர் பணி செய்து வாழ - வழி நடத்துவது இன்றைய திருச்சபையின் தலையாய கடமையாகும். இப்பணியை - திருச்சபையிலிருந்து நமது சமுதாயம் எதிர்பார்க்கின்றது.

''அன்பும் நட்பும் எங்குளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்'' -

யாழ்ப்பாணக் கல்லூரி வட்டமேசையினர்
அதிபர், உப அதிபர்களை
பாராட்டிக் கௌரவித்த வைபவத்தில்
முதல் பெண் துணை அதிபர்

## செல்வி சற்குணம் பரமராணி குலசிங்கம்
(Deedie) அவர்களின்

## பாராட்டுப் பாமாலை

காலத்தாற் சாயாது நின்று நாளும்
கருவூலமாக எமைக் காத்து நிற்கும்
சீலத்தாற் பெரிதான கல்விச் செல்வம்
சிந்தையெலாம் மலர்ந்தெழுந்து சிலிர்ப்பு எய்த
ஞாலத்தில், மேலை நாடிருந்து வந்து நம்மவர்க்கு
இயேசுபிரான் நாமம் சொல்லிச்
சாலவுமே ஒளிவீசும் யாழ்ப்பாணக் கல்லூரிச்
சரிமதே, எங்களது சரிதமாகும்!

அன்றிருந்து இன்றுவரை அதிபரானோர்
அருகமர்ந்த துணையதிபர் அனைத்துப் பேரும்
சென்றிருந்த நேர்வழி தவறிடாது
சேர்ந்திருந்ததால் வையம் போற்றும் வண்ணம்
நின்றிலங்கும் யாழ்ப்பாணக் கல்லூரியின்று
நேரிழையார் துணையதிபர் பதவியேற்றுக்
குன்றிலிட்ட விளக்காகக் குலவுந் தன்மை
கூறுகின்ற வரலாற்றுப் பெருமையாகும்!

எல்லாமே வெளிநாடு, மேலைநாடு
என்பவற்றேயுளதென்று பேசிப் பேசி
''வல்லவர்கள் பெண்களிடை யில்லையிங்கே
வருத்தந்தான்'' என்றிட்ட காலம் மாறி
மெல்லியார் தாமுமின்று யாவு மாற்றும்
மேன்மைகொளும் வலிவுடையார் என்று சாற்ற
நல்லியல்பாள் எங்கள் முதற்றுணை யதிபரானார்!
நாமுள்ளங் குளிர்ந்து மிக வாழ்த்துகின்றோம்!

மானுடப் பெண்மை மகத்துவம் உணர்த்தி
மாநிலம் போற்றும் மாதரசாகத்
தானுடம்பேற்றுத் தனித்துவம் பேணித்
தக்கவை யாவும் தன் வசமாக்கிப்
பேணிடுங் கல்விப் பெருமையாற் சிறந்து
பெற்றவர், உற்றவர், பிறரெலாம் வாழ்த்த
ஊனுடம்பேற்ற ஒரு பெருஞ் செல்வி
உதவி அதிபர் உயர்வினைப் பெற்றாய்!

போற்றும் பெருந்தகை (Boss) "பொஸ் செல்லையாவும்
பொங்கிடுங் கல்விப் பரம்பரை வலுவும்
நாற்றங்காலாய் நன்கே அமைந்த
நல்ல குடும்பம் பின்னணி சேர;
ஊற்றாய்ச் சுரந்திடும் உயர்பண்பதனால்
உள்ளம் யாவும் ஒருங்கே கவரும்
கீற்றாய் ஒளிர்ந்து, கிழ்மை மறந்து
கீர்த்திக்குரிய கிரீடம் பெற்றாய்!

மாணவர் கல்வி, மகத்துவ நெறிகளில்
மன்னிய வலைப்பந்தாட்ட முறைகளில்
ஆனதைச் செய்து, அரும்பணியாற்றியும்
அங்கெலாம் உந்தன் அறுவடை காட்டியும்
நானிலம் போற்றிடும் நங்கையாய்த் திகழும்
நம்மவர் தோழி நீ, நாளெலாம் வாழ்கவே!

யாழ்ப்பாணக் கல்லூரி இளைப் பாடசாலை - பரந்தன்

## விளையாட்டுப் போட்டி

மேற்படி பாடசாலையில் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி 14.03.94 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்படி பாடசாலை அதிபர் திரு.கே எஸ்.திசைராஜா தலைமையில் ஆரம்பமானது. பிரதம விருந்தினராக அருள்.திரு.பி. ஆர் நவேந்திர அநுகூலன் அவர்கள் சமூகமளித்திருந்தார் பிரதம விருந்தினரின் ஜெபத்துடன் பெற்றாராலும் பிரதம விருந்தினராலும் மங்கள தீபம் ஏற்றப்பட்டது' இப்பாடசாலை ஆசிரியை செல்வி ஆ. இமெல்டாவினால் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடப்பட்டது. பின்னர் மாணவர்மாணவியரது பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

பிரதம விருந்தினருக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் அதிபரால் வரவேற்புரை வழங்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டி ஆரம்ப நிகழ்ச்சியாக மாணவத் தலைவர்கள் செல்வி சர்மினி நவரத்தினம், தோ கிறாம்பேட் த. விநோத் ஆகியவர்களால் ஒலிம்பிக் தீப ஒளி கொண்டு வலம் வரப்பட்டது.

மஞ்சள் சிவப்பு என, இரண்டு இல்லங்களுக்குடையே கடும் போட்டி நிலவியது. மேற்படி இல்ல ஆசிரியர்களாக முறையே செல்விகள் க, சுமதீஸ்வரி, அ. இமெல்டா, ஆகியோர் கடமை புரிந்தனர்

50.மீ ஓட்டம், முயலோட்டம், யானையோட்டம், சாக்கோட்டம்! பழம்பொறுக்கல்'பணிஸ் சாப்பிடும் ஓட்டம்,நண்டு ஓட்டம் என்பன போட்டியில் இடம் பெற்றன.

சிவப்பு இல்லம் முதலாம் இடத்தைப்பெற்றது. சிறந்தபோட்டியாளர்களுக்கு திருமதி எல். அநுகூலன் பரிசில்களை வழங்கினார்.

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai. 13 - 05 - 1994


EDITORIAL

## NELSON MANDELA THE PRESIDENT

Nelson Mandela is the man who moved from the prison house to the Presidential Palace. It was a historic event when Nelson Mandela took oaths as the first Non-White President of South Africa on 10th May 1994.

Nelson Mandela is a great South African leader and a freedom fighter. Because he loved his people and country he braved all hardships in the prison and even enjoyed life there. The prison authorities tried to stifle the joy of Mandela and fellow prisoners by preventing them from singing. But that did not deter his zeal for freedom.

Born in July 1918, he was sent out of the University in 1940 because of his colour. He formed the Youth League of African National Congress in 1944. He passed his law degree through postal tuition and was actively involved in the freedom struggle. This led into his arrest in 1964. He was in the prison for 27 years. Because of world pressure, he was released in February 1991 and was made the President of African National Congress: The last White President of South Africa, De Clerk singed to an agreement with African National Congress which led to the first non-racial elections. The Non-Whites in South Africa have achieved what they struggled for - the freedom. They were oppressed, like the Hebrews in Egypt. Their Egyptian bondage is over and now they are free; free to choose their own government; can live where they want to; jobs are open to them and can have their own education.

We in Jaffna congratulate Nelson Madela and all in South Africa on his election as first Non - White President. There was hope-they believed that God would raise a up Moses from among hem and they found Moses in Nelson Mandela. God has seen their affliction; God has heard their cry and so he delivered them from their 350 years of bondage.

'Do not oppress the alien when you dwell in the land God has given you, because you yourselves were aliens in Egypt' said Moses. The people of South Africa were alienated in their own country till recently. So we believe that they will not oppress the aliens in their land. Nelson Mandela himself knew what it is to be alienated, and oppressed: So he decided to embrace all people into one fold as Moses did. There is place for Whites as well as Blacks in his cabinet and has chosen De Clark - a White- as one of his deputies.

The great Challenge the South African faces is keeping together all tribes. The future of South Africa will be bright, if everyone, irrespective of one's Colour, language or religion is given one's due place. But if they try to deny the rights of the minorities and start fighting among themselves the country will disintegrate.

As we rejoice with the people of Africa in their God given freedom, we pray that they will remain united by recognizing the God given freedom and integrity of each and every tribe.

God bless Mandela; God bless South Africa.

A A. P.

## J.D.C.S.I. PRE-SCHOOL TRAINING PROGRAMME

### Annual Leadership Development Camp and Graduation Ceremony

The Jaffna Diocese of the Church of South India held its Annual Leadership Development Camp at Ottley Hall, Jaffna College on 24th and 25th April 1994 .Miss S. P. Gulasingam functioned as Camp Chief and Mr. W. N- Thevakadacham as Camp Director. The Camp Organizers were Mr. N.S. P. Thambee and Mrs. V, Paul·

The first day's programme started with meditations by the Rev.A Jeyakumaran and hoisting of the Camp Flag The second day's Programme started with meditations by the Rev. A. A. Paul.

The camp Programme included Bible/Moral Studies' Emergency First Aid' Art & Crafts' Group Discussions' Keep Fit' Singsong' Kim's Game, Speech Training, Novel Games Quiz. Drama and Road Safety.

The Camp came to an end with Graduation Ceremony. The Rt. Rev. Dr S. Jebanesan and Mrs. V. Jebanesan were Chief Guests. The following guests of honour were also spoke. Lion Dr. T Paheerathan, Mr. S. Kugarajah President, SLRC Vaddukoddai Branch. Mr. Cedrick Pivela- Chief Delegate, ICRC and Miss Fabion- Medical Coordinator, ICRC Mrs.V. Jebnnesan distributed the certificates,

— —

## In Memoriam

Mr. T: Gunanayagam who passed away under tragic circumstances in Jaffna on the 23rd of February, 1994 was the son of late Mr. T. Thuraiappah. the first Head Master of the American Mission Tamil School, Valalai. His brother and sister are the late Dr. T. Arumainayagam, Mr. T. Tissanayagam late Mrs. E: H. Ariyadurai, Mrs. P. Atputharajah, Mrs. E. P. Rajaratnam and Mrs. K. D. Araseratnam, all Devoted Members of the C. S. I. Church.

Mr. T. Gunanayagam who had his Secondary Education at St. John's College, Jaffna, joined the Fisheries Department and retired as the Assistant Commissioner of Fisheries, Jaffna. He was an outstanding Sportsman in his younger days and played Tennis up to the age of 65 and won many Trophies in Trincomalee, Colombo and Jaffna Tennis Clubs. He was also at one time an All Ceylon Volley Ball player.

He was a man of exemplary character and well known for his honesty, generosity and sociability. He was married to Themba Arulampalam who conducted the Finishing School at Trimmer Hall, Jaffna an outstanding Social Worker and presently residing in the States with her children.

His children are: Ragulan Gunanayagam, Consultant Engineer, Mrs Gunasundari Loganathan, Dr. Christain Priyadharshini.

May his Soul Rest in Peace.

— —

## Supplementry list University admission

The U G C has released a supplementary list of students admitted to the Arts Faculty of Jaffna University; According to this list another 33 student will be admitted.

Two more students from Jaffna College will enter the arts faculty now. They are Mr P Thevarajah, Miss. N Nanthini.

— —

## A Message from......

(Continued from page 1)

Let us then be vigilant and courageous as members of the body of Christ as we rebuild our faith in the family in the context of the search for a new world order. And may the Spiri of unity that fell on the gathered community also fall on us and build us into a community of faith. "In union with him" writes St. Paul, "You, too, are being built together with all others into a place where God lives through his Spirit" (Eph. 2.22).

"The grace of our Lord Jesus Christ, the love of God and the Communion of the Holy Spirit be with you all"

The Presidents of the World Council of Churches

Prof. Anna Marie Aagaard, Hojbjerg, Denmark
Bishop Vinton Anderson, St. Louis. United States
Bishop Leslie Boseto, Boeboe Village, Solomon Islands
Mrs Priyanka Mendis, Idama, Sri Lanka.
His Beatitude Patriarch Parthenios, Alexandria, Egypt
Rev. Eunice Santana, Arecibo Puerto Rico
His Holiness Pope Shenouda III, Cairo, Egypt
Dr Aaron Tolen, Yaounde, Cameroon

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocesan of The Church of South India The American Ceylon Mission Press 182 1st Cross Street Jaffna on Friday the 13th of May 1994 and Published by Mr T. A. TAMBIYAPPA Diocesan Office, Vaddukoddai